# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தம்)

**2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

---

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற் கல்வி அமைச்சர் அவர்களால்
2026 மாச்சு மாதம் 17 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 மாச்சு மாதம் 03 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

---

[56 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 29.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்

## சட்டப்பயன் பற்றிய கூற்று

***வாசகம் 2:*** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப்பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும் வகையில் சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுக்கான பதிவின் மொத்த விற்பனைவரவு வரம்பை ஆண்டொன்றுக்கு அறுபது மில்லியன் ரூபாவிலிருந்து முப்பத்தாறு மில்லியன் ரூபாவிற்கு குறைப்பதற்காகும்.

***வாசகம் 3:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன், 4 ஆம் பிரிவிற்கு செய்யப்பட்ட திருத்தங்களிற்கான விளைவாந்தன்மையினதாகும்.

***வாசகம் 4:*** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாவது அட்டவணையைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான அவ்வட்டவணையின் சட்டப்பயனானது –

(அ) அத்தகைய விடயத்தில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் மோட்டார் வாகனத்திற்கு ஏற்புடையற்பாலதான கால அளவை அமைப்பதன் மூலம் பாகம் I அ வின் 25 ஆம் விடயத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட விலக்களிப்பை மட்டுப்படுத்துவதற்குமாகும்;

(ஆ) பாகம் Iஆ வின் கீழ் ஏதேனும் மோட்டார் வாகனத்தை விலக்களிப்பதற்குமாகும்.

## சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு
## (திருத்தம்)

ச.வ.-ஒ. 73/2025

**2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப் படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீடு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க சட்டத்தின் 4 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2022 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சமூகப் பாதுகாப்பு உதவுதொகை அறவீட்டுச் சட்டத்தின் 4 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (இ) என்னும் பந்தியில், "2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் அத்துடன் 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான," என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(ஈ) 2026, ஏப்பிரல் 1 அந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்காக,

PL 15709 - 172 (2026/03)

ஒரு காலாண்டுக்கான மொத்த விற்பனை வரவின் கூட்டுமொத்தம் எந்தத் தேதியன்று ஒன்பது மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அல்லது விஞ்சக்கூடிய சாத்தியமுள்ளதோ அந்தத் தேதியிலிருந்து அல்லது தொடர்ச்சியான நான்கு காலாண்டு காலப்பகுதியொன்றிற்கான மொத்த விற்பனை வரவின் கூட்டுமொத்தம் எந்தத் தேதியன்று முப்பத்தாறு மில்லியன் ரூபாவை விஞ்சுகின்றதோ அல்லது விஞ்சக்கூடிய சாத்தியமுள்ளதோ அந்தத் தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல்:";

(3) அதன் (இ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தில், "இத் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2024, மாச்சு 20 ஆந் தேதியிலிருந்து" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(4) அதன் (இ) என்னும் பந்திக்கான காப்புவாசகத்தை உடனடுத்து பின்வரும் புதிய காப்புவாசகத்தினை சேர்ப்பதன் மூலமும்:-

"ஆயின் மேலும் எவ் வரிவிதிக்கப்படற்பாலதான ஆள் ஒருவருக்குபந்தி (ஈ) ஏற்புடையதாகின்றதோ அவ் வரிவிதிக்கப்படற்பாலதான ஆள் இத் (திருத்தச்) சட்டம் நடைமுறைக்குவரும் தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குப் பிந்தாமல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் ஆணையாளர் தலைமையதிபதிக்கு அத்தகைய நோக்கத்திற்காக

விண்ணப்பமொன்றை அத்தகைய ஆள் செய்திருப்பின், இவ்வுட்பிரிவின்கீழ் பதிவுசெய்தல் தேவைப்பாட்டுடன் இணங்கியொழுகியிருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவினைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (ஆ) என்னும் பந்தியில், "நூற்றியிருபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து; அல்லது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "நூற்றியிருபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(2) அதன் (இ) என்னும் பந்தியில், "2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்காக தொடர்ச்சியான நான்கு காலாண்டு காலப்பகுதியொன்றிற்காக, அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளின் கூட்டுமொத்தமான விற்பனைவரவு அறுபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2024, சனவரி 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் மற்றும் 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக தொடர்ச்சியான நான்கு காலாண்டு காலப்பகுதியொன்றிற்காக, முறையே அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளின் கூட்டுமொத்தமான விற்பனைவரவு அறுபது மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து; அல்லது;" அத்துடன்

(3) அதன் (இ) என்னும் பந்தியை உடனடுத்து பின்வரும் புதிய பந்தியினை சேர்ப்பதன் மூலமும்:-

"(ஈ) 2026 ஏப்பிறல் 1 அந் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் காலப்பகுதிக்காக, தொடர்ச்சியான நான்கு காலாண்டு காலப்பகுதியொன்றிற்காக, அத்தகைய பதிவுசெய்யப்பட்ட ஆளின் கூட்டுமொத்தமான மொத்த விற்பனைவரவு முப்பத்தாறு மில்லியன் ரூபாவை விஞ்சாதவிடத்து,".

**4.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாவது அட்டவணையானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்

(1) அதன் பாகம் Iஅ வின் 25 ஆம் விடயத்தில் "இறக்குமதியின் மீது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "2026, ஏப்பிறல் 1 ஆந் தேதிக்கு முன்னர் இறக்குமதியின் மீது" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அதன் பாகம் Iஆ வில்-

(அ) 5 ஆம் விடயத்தில், "எல்.பீ.வாயு; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எல்.பீ.வாயு;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) 6 ஆம் விடயத்தில், "அல்லது தான் இறப்பர்)." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அல்லது தான் இறப்பர்); அத்துடன்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(இ) 6 ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தினைச் சேர்ப்பதன் மூலமும்:-

"7. 2026, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும் வகையில் ஏதேனும் மோட்டார் வாகனம்.".

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**5.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.